இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 224 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – பங்குனி 12 – வியாழக்கிழமை 26 மார்ச் 2026 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 224 : Thiruvalluvar Year - 2057 - Panguni 12 - Thursday 26 March 2026 - Trichy ★★ 12 Pages ₹ 5.00

## வாக்குரிமையைப் பறிக்க பா.ஜ.க.வை அனுமதிக்க மாட்டோம்! மம்தா உறுதி!



கொல்கத்தா, மார்ச் 26 - வாக்குரிமையைப் பறிக்க பா.ஜ.க.வை அனுமதிக்க மாட்டோம் என்று மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி கூறினார்.

கொல்கத்தாவின் 'ரெட் ரோடு' பகுதியில் ரம்ஜான் தொழுகைக்குப் பிறகு, அங்கு கூடியிருந்த மக்களிடையே மம்தா பானர்ஜி உரையாற்றினார்.

அப்போது அவர் கூறியதாவது: வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் (எஸ்ஐஆர்) பணி மூலம் வாக்காளர்களின் பெயர்கள் பெருமளவில் நீக்கப்பட்டுள்ளன. இது, தேர்தல் நடைமுறையில் செல்வாக்கு செலுத்துவதற்கான பரந்த முயற்சியின் ஒரு பகுதியாகும்.

எஸ்.ஐ.ஆர். மூலம் பா.ஜ.க. உங்கள் வாக்குரிமையைப் பறிக்க நாங்கள் அனுமதிக்க மாட்டோம். ஜனநாயகத்தையும் ஒவ்வொரு குடிமகனின் உரிமைகளையும் பாதுகாக்க நாங்கள் இறுதிவரை போராடுவோம்.

மேற்கு வங்கம் ஒற்றுமையை நம்புகிறது. இந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர்கள், கிறிஸ்தவர்கள் என அனைவரும் இணைந்து வாழ்கின்றனர். இந்த சமூக நல்லிணக்கக் கட்டமைப்பை சிதைக்க நாங்கள் அனுமதிக்க மாட்டோம். இவ்வாறு மம்தா பேசினார்.

மொத்தம் 294 உறுப்பினர்களைக் கொண்ட மே.வங்க பேரவைக்கு ஏப்ரல் 23, 29 ஆகிய தேதிகளில் 2 கட்டங்களாக தேர்தல் நடைபெற உள்ளது.

## மேற்காசியப் போர்: ஒன்றிய அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் என்ன?

# மக்களை பாதுகாக்க பிரதமர் தயாராக இருக்கிறாரா?

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கேள்வி!

**சென்னை, மார்ச் 26 -**

**"மேற்காசியப் போர்ச் சூழ்நிலை காரணமாக மக்களைத் தயாராக இருக்கச் சொல்லும் பிரதமர், மக்களைப் பாதுகாக்கத் தயாராக இருக்கிறாரா?" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

PREPAREDNESS CANNOT BE OUTSOURCED TO THE PEOPLE.

PREPARED FOR WHAT — LEADERSHIP, OR ITS ABSENCE?

பிரதமர் அவர்களே... தயாராக இருக்க வேண்டியது ஒன்றிய அரசா? நாட்டு மக்களா? COVID 19க்குத் தயாரானதுபோல் WEST ASIA WARஇன் பாதிப்புகளுக்கும் தயாராக இருக்க வேண்டும் என்கிறார் பிரதமர்.

போர்ச்சூழல் தீவிரமடைந்த உடனே, அதன் தாக்கங்களை உணர்ந்து, அனைத்துப் பயன்பாடுகளுக்குமான சிலிண்டர்கள் தடையின்றிக் கிடைப்பதை உறுதிசெய்ய வேண்டும்; வளைகுடா நாடுகளில் சிக்கியுள்ள தமிழர்களை மீட்க வேண்டும்; மின் நிலையங்களுக்



கான எரிவாயு விநியோக அளவுக் கட்டுப்பாடுகளை மாற்றி அமைக்க வேண்டும்;

- என (12.03.2026 அன்று) தங்களுக்குக் கடிதம் எழுதினேன்.

### தமிழ்நாடு சார்பில் ஏற்கனவே அறிவிப்பு!

நிலைமையின் தீவிரத்தை ஒன்றிய ஆட்சியாளர்களுக்கு உணர்த்த எதிர்க்கட்சிகள் நாடாளுமன்ற வளாகத்தில் (14.03.2026 அன்று) போராட்டம் நடத்தினர்.

தங்களது நடவடிக்கைகளுக்குக் காத்திராமல், பொறுப்புள்ள மாநில அரசாக உயர்நிலை ஆலோசனை மேற்கொண்டு, உணவு உற்பத்தித் தொழிற்கூடங்கள் LPGக்குப் பதிலாக மின் அடுப்புகளைப் பயன்படுத்தும் போது ஏற்படும் கூடுதல் மின்சார நுகர்விற்கு, யூனிட் ஒன்றுக்கு ரூ.2 மானியம்!;

MSME நிறுவனங்கள் மின் அடுப்புகள், மின் சூடேற்றிகள் கொள்முதல் செய்வதற்கு மானியத்துடன் கூடிய கடன்!;

தொழிற்சாலைகள் மாற்று எரிபொருட்களைப்பயன்படுத்திக் கொள்ள TNPCB இசைவாணை பெறத் தேவையில்லை; உணவகங்கள் மூடப்படும் வேளையில், விவசாயிகளின் வாழ்வாதாரத்தினை கருத்தில் கொண்டு, காய்கறிகள் மற்றும் பழங்களை 194 உழவர் சந்தைகளில் எவ்விதக் கட்டுப்பாடு இல்லாமல் அவர்கள் விற்பனை செய்து கொள்ள அனுமதி;

என்பன உள்ளிட்ட அறிவிப்புகளை எரிவாயு தட்டுப்பாட்டை எதிர்கொள்ள அறிவித்தோம்;

### தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம்!

அப்போதே (15.03.2026) கேட்டேன்: மக்கள் நலனைக் காக்க




ஒன்றிய அரசு என்ன செய்யப் போகிறது? என்று அப்போதும் பதில் இல்லை.

தொலைநோக்கும் முன்னெச்சரிக்கையும் இன்றிச் செயல்படும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்துத் தமிழ்நாடெங்கும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியினர் ஆர்ப்பாட்டம் நடத்தினோம்.

இத்தனைக்கும் பிறகு, "மக்கள் தயாராக இருக்க வேண்டும்" என்று மக்களுக்கே அறிவுரை வழங்குகிறீர்கள்.

### நீங்கள் தயாரா?

மக்களைத் தயாராக இருக்கச் சொல்லும் முன், அவர்களைக் காக்க நீங்கள் தயாராக இருக்கிறீர்களா? மேற்காசியப் போரின் தாக்கங்களில் இருந்து இந்திய மக்களைப் பாதுகாக்க, நீங்கள் எடுத்துள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் என்ன? இப்போது நாட்டின் கேள்வி ஒன்றுதான்:

"எங்களைக் காக்கப் பிரதமர் தயாராக இருக்கிறாரா?"

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான

# 'திராவிட மாடல்' ஆட்சியில் மக்கள் நலத்திட்டங்கள்!

## 'தி டைம்ஸ் ஆப் இந்தியா' பாராட்டு!

**சென்னை, மார்ச் 26 -**

**'தி டைம்ஸ் ஆப் இந்தியா'வில் (24.3.2026) சிறப்புக் கட்டுரை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அனைத்துத் தரப்பு மக்களும் பயனடையத்தக்க பல்வேறு மக்கள் நலத் திட்டங்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான 'திராவிட மாடல்' ஆட்சியில் செயல்படுத்தப்பட்டு வருவதை உரிய எடுத்துக்காட்டுகளுடன் அந்தக் கட்டுரை படம் பிடித்துள்ளது.**

**தமிழ்நாட்டின் புதிய நலத்திட்டங்கள்: கல்வி மையங்கள், பகுதிநேரப் பணி மையங்கள், மகளிர் தங்கும் விடுதிகள் என்ற தலைப்பில் 'திராவிட மாடல்' ஆட்சியின், சிறப்புகள் குறித்து 'தி டைம்ஸ் ஆப் இந்தியா' சிறப்புக் கட்டுரை வெளியிட்டுள்ளது.**

அது வருமாறு :-

தேர்வு எழுதுவோர் முதல் தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் வரையிலும், விநியோகப் பணியாளர்கள் முதல் பெண் தொழிலாளர்கள் வரையிலும், வேலை, படிப்பு மற்றும் ஓய்விற்காக எளிதில் அணுகக்கூடிய, நன்கு வசதியளிக்கப்பட்ட இடங்களை உருவாக்குவதில் இந்தத் திட்டங்கள் தனிக் கவனம் செலுத்துகின்றன.

சென்னை, பெரம்பூரைச் சேர்ந்த 25 வயதான நிதீஷ் குமார், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் (TNPSC) தனது முதல் தடையைக் கடந்தார்.

தமிழ்நாடு பொதுப்பணித் தேர்வு ஆணையத்தின்) குரூப்II முதல்நிலைத் தேர்வில் வெற்றி பெற்றார், ஆனால் முதன்மைத் தேர்வில் தடுமாறினார். ஒரு பெரிய குடும்பத்துடன் வசிக்கும் நிதீஷ், தனது இரண்டாவது முயற்சியில் எந்தவித கவனச்சிதல்களும் இல்லாமல் இன்னும் கடினமாகப் படிக்க வேண்டும் என்பதை உணர்ந்தார். ஆனால், அவருக்குத் தனிப்


TN's new welfare: Study hubs, gig pods, women's hostels

From exam aspirants to IT professionals, and delivery personnel to women workers, schemes focus on creating accessible, well-equipped spaces for work, study and rest

பட்ட முறையில் படிக்க இடம் இல்லாத வீட்டில் அது சாத்தியமற்றதாக இருந்தது.

நல்லவேளையாக, அதற்கு ஒரு சுலபமானத் தீர்வு இருந்தது. அவர் அருகிலுள்ள ஓர் இடத்தில் முன்பதிவு செய்தார்.

அது 'முதல்வர் படைப்பகம்' (தோராயமாக 'முதலமைச்சரின் படைப்பாற்றல் வெளி') என்பது, தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பாக இளைஞர்களை இலக்காகக் கொண்ட பல நலத்திட்டங்களின் ஒரு பகுதியாகத் திறக்கப்பட்ட ஒரு கூட்டுப் பணி வசதியாகும். குடிமைப் பணித் தேர்வர்களாலும் பயன்படுத்தப்படும் இந்தக் கூட்டுப் பணி இடங்கள், நிதிஷுக்குத் தடையற்ற படிப்புக்கான இடத்தை வழங்கின. இந்த முறை, அவர் தேர்வில் வெற்றி பெற்றார்.

"நான் நான்கு மாதங்கள் படித்தேன்," "நான் காலை 6.30 மணிக்கு வந்து நாள் முழுவதும் படிப்பேன். அந்த இடம் முற்றிலும் எந்த இடையூறும் இல்லாமல் இருந்தது. வீட்டில், எனக்குப் பல கவனச்சிதறல்கள் இருந்தன." என்றும் தெரிவித்தார் நிதீஷ்.

### பிறப்பு முதல் இறப்பு வரை

மாநிலத்தில் பிறப்பு முதல் இறப்பு வரை, வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்தையும் நலத்திட்டக் கொள்கை தற்போது கிட்டத்தட்ட உள்ளடக்கியுள்ளது.

தமிழ்நாட்டில் கர்ப்பப் பதிவு கட்டாயமாகும். கர்ப்பம் உறுதி செய்யப்பட்ட உடனேயே 12 இலக்க PICME (கர்ப்பிணி மற்றும் சிசு கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு) எண் உருவாக்கப்படுகிறது. இந்த இனப் பெருக்க மற்றும் குழந்தை சுகாதார அடையாள எண், பிறக்காத குழந்தைக்கும் அதன் தாய்க்கும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி குழந்தை நலத் திட்டத்தின் கீழ் ரூ.18,000 பெறுவதற்கும், மேலும் பல மாநில சலுகைகளைப் பெறுவதற்கும் உரிமை அளிக்கிறது.

தகனச் செலவுகள் கூட முழுவதுமாக அரசால் ஏற்கப்படுவதால், மரணம் கூட இந்த நலப் பயணத்தை முடிவுக்குக் கொண்டு வருவதில்லை.

தொடர்ச்சி 4–ஆம் பக்கம்



மு.க.ஸ்டாலின் வழங்கும் விடியல் பயணம் - உரிமைத் தொகையால் தலை நிமிர்ந்தோம்!

